
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 10 நவம்பர்- 1997 இதழ் - 11



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்

1. எரியும் முட்செடியிலிருந்து...... 1
2. ஒரு பொய்ப் போதகனுக்குப் பதில் 9
3. பெண்கள் பகுதி 14
4. குணப்படு பாவி 18
5. பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்கு 21
6. ஆவியின் கனி (சந்தோஷம்) 27
7. கிறிஸ்தவர்களுக்கு பாடுகள் உண்டா? 29
8. கர்த்தருடைய சபையை நாம் கண்டுபிடிக்க முடியுமா? 31

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 NOVEMBER - 1997 Issue -11

## ஆசியவுரை

# எரியும் முட்செடியிலிருந்து.....

பழைய ஏற்பாட்டின் இரண்டாம் புத்தகமாகிய யாத்திரை ஆகமம், வேதாகம சரித்திரத்தின் மிக முக்கியமான நூல் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தனித்துவம் பெற்ற நாடாக விளங்கிய, இஸ்ரவேல் ஒரு தேசமாக உருவெடுத்த சம்பவங்கள் இதில் தான் அடங்கி உள்ளது. ஒரு சமயத்தில், முற்பிதாக்களில் ஒருவனாகிய யாக்கோபின் தலைமையில், எழுபது பேராகச் சென்ற அந்த யூதக் குடும்பம், வளமான எகிப்து தேசமென்னும் "கர்ப்பத்தில்" வேகமாக வளர்ந்து, காலம் நிறைவேறின போது இஸ்ரவேல் தேசம் என்னும், "குழந்தையாக" 20 முதல் 30 இலட்சம் மக்களோடு வழக்கமான "பிரசவ வேதனைக்கும்" அதிகமான வேதனையோடு, இப்பூமியில் பிறந்தது. இத்தேசக் குழந்தை, தேவ அன்பையும், அரவணைப்பையும் பெற்று வளர்ந்தவிதமெல்லாம் இந்நூலில் தான் இடம் பெற்றுள்ளது.

இவைகளல்லாமல், நினையாத நேரத்தில் நடந்த பல அற்புதங்களும், பிரமிப்பூட்டும் காட்சிகளும், இதில் இடம் பெற்றுள்ளது. அவைகளில் ஒன்று தான், **"எரியும் முட்செடியில் தேவன் மோசேக்குக் காட்சி தந்தது"**. ஆம், தீயின் வாடை பட்டவுடன் 'சடசட' என்ற சத்தத்தோடு பற்றியெரிந்து, கருகிச் சாம்பலாக வேண்டிய முட்செடி, கொழுந்துவிட்டு தகித்து எரியும் அக்கினித் தழலுக்கும் மத்தியில், தனது

பசுமைக் குணத்தை கொஞ்சமும் சேதப்படுத்தாமல், தழதழவென்று நின்றது. காண்போரைக் கவர்ந்திழுத்து, பார்ப்போரைப் பிரமிக்க வைத்து, நாடுவோரை நடுங்க வைக்கும், இவ்வரிய காட்சியைப் பார்க்கும் சிலாக்கியத்தை பிரமாணங்களின் தந்தையாகிய மோசே தனது எண்பதாவது வயதில் பெற்றான்.

இந்தக் காட்சியின் பின்னணியைக் கொஞ்சம் சொல்கிறேன். இராஜ குமாரத்தியின் மகனென்ற அந்தஸ்தோடு, அரண்மனையின் அனைத்து சாஸ்திரங்களாலும் கற்பிக்கப்பட்டு, சகலகலா வல்லவனாக வளர்ந்த மோசே, ஒரு சமயம், தனது சமுதாயப் பற்றினடிப்படையில் செயல்பட்டு சகோதர துரோகத்தால் வசமாக மாட்டிக் கொண்டான். காரியம், பார்வோனின் காதுக்குச் சென்று அவன், மோசேயைக் கொலை செய்ய வகை தேடினான். அப்பொழுது பார்வோனின் பயங்கரத்துக்கு தப்பமுடியாது என்பதால், அவன் மீதியான் தேசத்துக்கு ஓடிப்போனான். (யாத். 2 : 11–15).

அங்கு தனக்கு எதிர்வந்த சூழ்நிலையை சாதுரியமாகச் சந்தித்து, அத்தேசத்து ஆசாரியனான ரெகுவேலின் குமாரத்திகளில் ஒருத்தியாகிய சிப்போராளை மணமுடித்து, வீட்டு மருமகனானான். அரண்மனையில் அமர்ந்து ஆட்களை விரட்டி வந்த மோசேக்கு இப்பொழுது காடுகளில் அலைந்து ஆடுகளை மேய்க்கும் கட்டாயம் ஏற்பட்டது. இவ்வேலையை அவன் சுமார் 40 ஆண்டுகள் செய்ய நேர்ந்தது.

ஆடு மேய்ப்பதென்பது, இன்று நம்முடைய ஊர்களில் மேய்ப்பது போல் சுலபமானதல்ல. விரல் விட்டு எண்ணக் கூடிய ஆடுகளை, கயிறு போட்டு கட்டி கையில் பிடித்து மேய்ப்பது போலோ அல்லது நாற்புறமும் வேலியடைத்த காடுகளினுள்ளே விட்டு மேய்ப்பது போலோ அல்ல. காலையிலே அது ஒரு வேலிக்கோ அல்லது ஒரு காட்டுக்கோ ஓட்டிப் போய் மதிய உணவிற்கு வீடு வந்து சேர்வது போலுமல்ல. மாறாக, அடங்காமல் அங்குமிங்கும் ஆட்டம் கட்டும் ஆயிரங்களிலான ஆடுகளை ஒன்று சேர்த்து, நாட்கணக்கில், வாரக் கணக்கில், சமயங்களில் மாதக்கணக்கில் வெளியே தங்கி, அவைகளை பொறுமையோடு வழிநடத்தி, வயிறார மேயவிட்டு, தாகம் தீர தண்ணீர் காட்டியாக வேண்டிய சிரமமான வேலை.

குழந்தைப் பருவத்தை இராஜ குமாரத்தியின் மடியிலும், பிள்ளைப் பருவத்தை தாதிகளின் இடுப்பிலும், இளம் பருவத்தை ஏராளமானவர்களின் கொஞ்சலிலும், வாலிபப் பருவத்தை ஆன்றோர்களின் அரவணைப்பிலும் கழித்த மோசே, ஆடுகளின் பின்னால் திரிந்தபோது

எவ்வளவு பாடுகள் பட்டிருப்பான் என எண்ணிப் பாருங்கள். அப்பொழுதெல்லாம், தேவன் தன்னை ஒரு விசேஷ நோக்கத்திற்காக ஆடுகளின் பின்னால் அலையவிட்டுத் தயார்படுத்துகிறார் என்பது அவனுக்குத் தெரியாது. ஆகவே, தன் நிலையை நொந்தவனாகவே, தன்னுடைய நாட்களைக் கடத்தியிருப்பான்.

மெல்ல மெல்ல இவன் தன்னை இந்த சூழலுக்குப் பழக்கப்படுத்தி, "வனாந்திரம் என்ற பல்கலைக்கழகத்தில்", "பொறுமை" என்னும் சிறப்புப் பாடத்தில், முதல்தர மாணவனாகத் தேறுகின்ற நிலை வந்த போது, தேவன் இவனைத் தனக்காகத் தெரிந்து கொள்ள முடிவு செய்தார். ஒரு மாபெரும் வேலையை கனகச்சிதமாக நிறைவேற்ற வேண்டிய கடமை இவனுக்கு இருந்தபடியால், இவன் அதற்கு தன்னை **முழுமையாக** ஒப்புக்கொடுக்க வேண்டுமென எதிர்பார்த்து, தேவன் தன்னை ஒரு அற்புதமான காட்சியின் மூலம் இவனுக்கு வெளிப்படுத்தினார். அந்த பயங்கரமான காட்சிதான், "**. . . . . முட்செடி அக்கினியால் ஜீவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது**" (யாத். 3 : 2)

காணக் கிடைக்காத அக்காட்சியைக் குறித்து, வேதம் மேலுமாக இப்படிக் கூறுகிறது. "அப்பொழுது மோசே : இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன் என்றான். அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி : மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன் : இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர் : இங்கே கிட்டிச் சேராயாக. உன் கால்களிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்." பின்னும் அவர் : நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப் பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக் கொண்டான்" (யாத். 2 : 3–6).

சரி, இந்த அற்புதக் காட்சியின் மூலம், மோசே என்னென்ன பாடங்களைக் கற்றுக் கொண்டானோ அல்லது மோசே கற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன் எதிர்பார்த்தாரோ நமக்குத் தெரியாது. ஆனால், இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள சில பாடங்கள் கண்டிப்பாக உண்டு. கவனிப்போம்.

## I. தேவன் பயப்படத்தக்கவர், பரிசுத்தமானவர்

முதலாவதாக, ஒருவன் தன்னை தேவனுக்கு, அவருடைய பணிக்கும் ஒப்புக்கொடுப்பதற்கு முன், அவன் அந்த தேவனுடைய

மகத்துவ வல்லமையையும், அவருடைய மகா பரிசுத்தத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

ஒருவேளை, தேவன் விரும்பியிருந்தால், தன்னை வேறுவிதமாகக் கூட வெளிப்படுத்தியிருக்கலாம். மோசேயை ஒரு சத்தத்தின் மூலமே ஒரு தரிசனத்தின் மூலமே ஒரு ஒளியின் மூலமே கூட அழைத்திருக்கலாம். ஆனால், அவரோ ஒரு பயங்கரமான காட்சியைத் தெரிந்து கொண்டார். ஏன்? தன்னை, மோசே நினைக்கும் பொழுதெல்லாம் அஞ்சி நடுங்க வேண்டுமென்பதே அவருடைய எதிர்பார்ப்பு. அதைத் துல்லியமாகப் புரிந்து கொண்டபடியால் தான் மோசே ஒரு மிகச் சிறந்த தலைவனாக மாற முடிந்தது. எங்கே பயம் உண்டோ, அங்கு தான் கீழ்ப்படிதல் இருக்கும். பயம் இல்லையேல் கீழ்ப்படிதலும் இல்லை.

இஸ்ரவேல் சரித்திரத்தில், மிகுந்த ஞானமும், திரண்ட செல்வமும், அதிகப் புகழும் பெற்ற ராஜாவாகிய சாலமோன், பிரசங்கி நூலின் கடைசி அதிகாரத்தின், முடிவான ஆலோசனையாகக் கூறுவது, **தேவனுக்கு பயப்படு** என்பதாகும். " . . . . . **தேவனுக்குப் பயந்து அவர் கற்பனையைக் கைக்கொள் . . .** " **என்கிறார் (பிர. 12 : 13). கற்பனையைக் கைக் கொள்ள "தேவபயம்" எவ்வளவு அவசியம் என்பதை, பரிசுத்த ஆவியானவரின் துணையோடு எப்படி வலியுறுத்துகிறார் பாருங்கள்.**

இந்நாட்களில் தேவனை ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றுகிறோம் என்கிறவர்களுக்குப் தேவ பயம் இருக்கிறதா? சுற்றும் முற்றும் பாராமல், நம்முடைய நிலையை நாம் நிதானித்துப் பார்ப்போம். நம்முடைய வாழ்வில் அவர் பற்றிய பயம் எந்த அளவு உள்ளது? சிந்திப்போம். பயமில்லாத படியால் தான் பஞ்சமாபாதகங்கள் கூட, கிறிஸ்தவத்தில் பகட்டோடு பவனி வருகிறது. இங்கே, ஒன்றை கவனியுங்கள். தேவன் பற்றிய அறிவு அநேகரிடம் அதிகமாவே உள்ளது. ஆனால், அது பாவங்களையும், பாதங்களையும் "பாதுகாப்பாக"ச் செய்வதற்குத் தான் பயன்படுத்தப்படுகிறதேயொழிய அவைகளுக்குச் சாவு மணி அடிக்கப் போதுமானதாக இல்லை. ஆகவேதான், தேவனைப் பற்றிய பயம் இன்று முக்கிய தேவையாக உள்ளது. உண்மைக் கிறிஸ்தவம் ஊருக்குத் தெரிய வேண்டுமானால், மெய்க் கிறிஸ்தவம் தழைத்தோங்க வேண்டுமானால், தேவனுக்கும் அவருடைய வசனங்களுக்கும் பயப்படும் பயம் தேவை.

அடுத்து, தேவன் தன்னைப் பரிசுத்தமானவர் என்று மோசேக்குக் காட்டுகிறார். "உன் கால்களிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் **"பரிசுத்த பூமி"** என்கிறார். பூமி எப்பொழுது பரிசுத்த

பூமி ஆயிற்று? ஒரு காலத்தில், அதாவது ஆதாம் ஆதியிலே பாவம் செய்த போது இந்தப் பூமி தேவனால் சபிக்கப்பட்ட பூமியாயிற்றே (ஆதி. 3 : 17). சாபத்தின் பூமி, பரிசுத்தத்தின் பூமியானது எப்படி? புரிகிறதா? தேவபிரசன்னம் அங்கு இருந்தபடியால் அந்த பூமி பரிசுத்த பூமியாயிற்று. ஆம், தேவன் சம்பந்தப்பட்ட யாவும் பரிசுத்தமானதே. தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்து பேதுரு இவ்வாறாகக் கூறுகிறார். "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (I பேதுரு. 1 : 15).

அன்பரே, அங்கே, மோசே தன்னை தேவ பணிக்கு ஒப்புக் கொடுப்பதற்கு முன்பாகவே அவருடைய மகா வல்லமையையும், பரிசுத்தத்தையும் ஏற்றுக் கொண்டான். நம்முடைய நாட்களின் நிலைமை எப்படி? தேவனுடைய வேலையைச் செய்கின்ற மிகப் பெரும்பாலான வரிடத்தில் அவரைப் பற்றிய பயம் அறவே இல்லை. அவர் பரிசுத்தமானவர் என்ற உணர்வும் இல்லை. பயம் இல்லாதபடியால் தான் வேத வசனங்களை துணிகரமாக மாற்றிப் போதித்து எதிர்த்து நிற்கிறார்கள். தேவ பயமில்லாத பிரசங்கிகள் பெருகுவதால் தான், கள்ள உபதேசங்களும் கணக்கிலடங்காமல் பெருகி வருகிறது. தங்களை அழைத்தவர் எப்படிப்பட்டவர் என்பது தெரியாதபடியால் தான், பரிசுத்த குலைச்சலான வாழ்க்கையை திரைமறைவில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அருமையானவர்களே, தேவன் நம்மோடிருந்து, நமது காரியம் ஜெயமாக மாறவேண்டுமானால் அவருடைய வல்லமையை அங்கீகரித்து அவருக்கு பயந்து, அவர்போல பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும். ஒருவேள்ள, நாம் ஊழியத்தைச் செய்கிற பாக்கியம் பெற்றிருந்தாலும் சரி அல்லது வேத அடிப்படையிலான கிறிஸ்தவர்களாக வாழும் சிலாக்கியம் பெற்றிருந்தாலும் சரி, இது தான் நிலை. ஏசாயா தீர்க்கனின் புத்தகத்தில் தேவன் இவ்விதமாகக் கூறியுள்ளார். "**. . . . ஆனாலும், சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்".** (ஏசா. 66 : 2). தேவனைப் பற்றிய பயம் இருந்தால் தான், வசனத்துக்கு நடுங்க முடியும். வசனத்துக்கு நடுங்கினால் தான், அதன்படி தேவன் போல பரிசுத்த வாழ்வு வாழ முடியும். அப்பொழுது தான் அவர் நம்மை நோக்கிப் பார்ப்பார். அவர், நம்மை நோக்கிப் பார்த்தால் தான் நமக்கு ஆசீர்வாதமும், சமாதானமும் கிட்டும்.

## II. அற்பமானவைகள் கூட தேவனால் பயன்படுத்தப்பட முடியும்.

அடுத்து, தேவன் தனது வல்லமையையும் பிரசன்னத்தையும் எப்படி வேண்டுமானாலும் வெளிப்படுத்த முடியும் என்பதை அங்கே

நிரூபித்துக் காட்டினார். மனிதனாலே மிகவும் அற்பமாக எண்ணப்படு பவைகள்கூட தேவனாலே முக்கியத்துவம் பெற முடியும் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

முட்செடி என்பது ஒன்றுக்கும் உதவாதது. அன்றும் சரி, இன்றும் சரி. அது தான் உண்மை. விறகாக எரிப்பதற்கு கூட அவ்வளவு லாயக்கானதல்ல. ஆனால், தேவன் அதைத் தான் தெரிந்து கொண்டார். அன்று, மோசே, அதைப் புரிந்தும் கொண்டார். ஒருவேளை, நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம். ஏதோ, வனாந்திரத்தின் வெப்பத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் முட்செடி தானாக பற்றியெரிகிறது என எண்ணி வேறு வேலையைப் பார்த்திருப்போம். ஆனால், விஷய ஞானமுள்ள மோசே, தேவ வல்லமையையும், பிரசன்னத்தையும் உணர்ந்து கொண்டான்.

அற்பமானவைகள், அவருடைய நாம மகிமைக்குப் பயன்பட்ட சம்பவங்கள் வேதாகமம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. நியாயாதிபதிகளின் நாட்களில் ஒரு பலவானின் கையில், கழுதையின் தாடை எலும்பைக் கொடுத்து ஆயிரம் பேரைக் கொன்றார் தேவன். (நியாயா. 15 : 16) இராஜாக்களின் நாட்களில், ஆடு மேய்க்கும் சிறுவனிட மிருந்த கவணையும், கூழாங்கற்களையும் கொண்டு, ராட்சதனாக இருந்த பெலிஸ்தனை வீழ்த்தினார். (I சாமு. 17 : 40). இயேசுவின் நாட்களில் ஒரு பொடியனின் வயிற்றுக்கு மாத்திரம் போதுமானதாக இருந்த 5 அப்பங்களையும் 2 மீன் துண்டுகளையும் கொண்டு 5000 பேருக்கும் அதிகமானவர்களை போஷித்தார். (யோவா. 6:9).இப்படி, இந்த வரிசையில் சேர்ப்பதற்கு இன்னும் அநேகம் உண்டு.

பிரியமானவர்களே, தேவனாலே எல்லாம் கூடும் என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அநேகராகிய நாம், நம்முடைய நம்பிக்கையில் தெளிவில்லாமல், தேவ வல்லமையின் இரகசியத்தை உணராமல் தேவனுடைய பிள்ளைகளாக ஜீவித்துக் கொண்டுள்ளோம். ஆனால், தேவ வல்லமையின் கருவியாக நாமும் மாற முடியும் என்பதைத் தெரிந்து கொள்வது மிகவும் நல்லது. நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படுவதற்கு அது பேருதவி செய்யும்.

ஒருவேளை, நாம் நமது குடும்பத்தின் பார்வையில், சமுதாயத்தின் பார்வையில், நாம் வேலை செய்யும் இடங்களில் அற்பமானவர்களாக எண்ணப்படலாம். நமக்குக் கல்வியும், அந்தஸ்தும், செல்வாக்கும், செல்வமும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், நாம் இருக்கிற இடங்களில், நமக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவைகளினடிப்படையில்,

நாம் என்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்தால் அவைகளை வேத வசனங்களின் முழு ஆதாரத்தோடு செய்தால், தேவன் நம்மையும் உபயோகிக்க முடியும். ஆம் நம்மிலிருந்தும், அவருடைய வல்லமையை வெளிப்படுத்த முடியும். எந்த ஒரு மனிதனும் முட்செடியிலும் மோசமானவனல்ல.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், அவராலே பயன்படுத்தப்படும் கருவியாக நம்மை வேத வசனங்களைக் கொண்டு மாற்றுவோம்.

## III. சாக்கு போக்குகளைத் தவிர்ப்போம்

தேவன் தன்னை ஒரு அற்புதக் காட்சியின் மூலம் மோசேக்கு வெளிப்படுத்திய பிறகும், மோசே அங்கு சாக்குப்போக்கு சொல்லி தேவப் பணியிலிருந்து நழுவ முயற்சித்ததை நாம் காணலாம். கூர்ந்து பார்த்தால், அவன் சொன்ன சாக்குகளில் கொஞ்சம் நியாயமும் இருந்ததை நாம் காணமுடியும். ஆடுமேய்க்கும், "நான் எம்மாத்திரம்" என்று சொன்னதில் தவறேதுமில்லை. "உன்னை அனுப்பினவருடைய நாமம் என்னவென்று கேட்டால், நான் என்ன பதில் சொல்லுவேன்" என்று அவன் பயந்ததிலும் நியாயம் இல்லாமலில்லை. சரளமாகப் பேச முடியாமல், சரீரத்தில் குறைபாடுள்ள மனிதனாக இருக்கிறேன்" என்று எடுத்துச் சொன்னதிலும் குற்றம் காணமுடியாது. ஆனாலும், அவை யாவும் தேவனுடைய பார்வையில் சரியானதாகத் தென்படவில்லை. மோசேயின் எந்தச் சாக்குப்போக்கும் அவனை அந்தப் பணியிலிருந்து விடுவிக்கப் போதுமானதாக இருக்கவில்லை.

மோசேயின் இத்தனை புலம்பலுக்கும், அவனுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் பதிலையே தேவன் கொடுத்தார். அவன் சோர்ந்து போக ஒரு கட்டத்திலும் இடம் தரவில்லை. "அவருடைய நாமம்" என்னவென்று கேட்டால், நான் **என்ன செய்வேன்** என்று அவன் பயந்து போய் கேட்டபோது, அவர் அளித்த பதில் அற்புதமானது. **"அதற்குத் தேவன்: இருக்கிறவராகவே இருக்கிறேன் . . . . . இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடு சொல்வாயாக என்றார்".**

நம்முடைய தேவன் எப்பொழுதும், "இருக்கிறவராகவே இருப்பது" எவ்வளவு பெரிய காரியம் என்பதைக் கவனியுங்கள். உலகத்திலே எந்த தெய்வத்திற்கு இந்தத் தகுதியும், வல்லமையும் உண்டு?

அருமையானவர்களே! அநேகராகிய நாம் கூட, வசனத்தின் மூலமாக சந்திக்கப்பட்டு, இயேசுவின் சீஷராக இருக்கும் ஆசீர்வாதம் பெற்றிருக்கிறோம். ஆனால், அன்று இயேசுக்கிறிஸ்து, சீஷர்களுக்குக் கொடுத்த **"பிரதான கட்டளையை"** நம்முடைய வாழ்க்கையில் ஏற்று செயல்படுத்துவதில், நாம் எந்த நிலையில் உள்ளோம். "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16 : 15) என்று கட்டளை கொடுத்துள்ளாரே, நாம் என்ன செய்கிறோம்? சரீர விடுதலைக்காகப் போராடு என்று மோசேயைப் பணித்தவர், ஆத்தும விடுதலைக்காகப் பாடுபடு என்று சொல்கிறாரே, பாடுபடுகிறோமா? சொல்லுங்கள்.

மோசேயைப் போலவே பல சாக்குப் போக்குகளை அநேக சமயங்களில் நாமும் அடுக்குகிறோம். ஆனால், அவைகளை நமது தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார். நம்முடைய பொய்க் காரணங்களைக் கேட்பதற்காக தேவன் நம்மை சுவிசேஷத்தைக் கொண்டு அழைக்கவில்லை. அவருடைய கட்டளைகளை சிரமேல் ஏற்று செயல்படவே அழைத்தார். "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்று மோசேயுடன் சொன்னவர் நம்மோடும் இருக்கிறார். மோசேக்கு, தேவையான நேரத்தில், நம்பிக்கையூட்டி, வெற்றியைக் கொடுத்தவர் நம்மோடும் கூட இருந்து, வழி நடத்தி ஜெயம் கொடுப்பார். செயல்படுவோம். பொய்க் காரணங்களை புதை குழிக்கு அனுப்பி, வெற்றி பெறுவோம்.

எனதருமைச் சகோதரனே! சகோதரியே! அன்று மோசேக்கு கொடுக்கப்படாத மிகப் பெரிய வாக்குத்தத்தம் **"பிரதான கட்டளையில்"** சீஷர்களாகிய நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கவனிக்க மறந்து விடாதீர்கள். **"இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"** (மத். 28 : 20) என்பதே அது. ஆகவே, எதைக் குறித்தும் நாம் அஞ்சத் தேவையில்லை. ஆத்தும ஆதாயப் பணியில் முழு மூச்சுடன் இறங்கிப் பணிபுரிவோம். பரம கானானுக்குள் மக்களை வழி நடத்துவோம்.

**S. ராஜநாயகம்.**

# ஒரு பொய்ப் போதகனுக்குப் பதில்

ஒரு பிரிவினைச் சபைப் போதகரால் எழுதப்பட்ட ஒரு சிறு புத்தகத்தை சமீபத்தில் இந்தியாவில் பார்த்தேன். அதில் அவரின் பிரதான நோக்கம், கிறிஸ்துவின் சபையைத் தாக்குவது. சபை பற்றியும், இன்னும் வேறுமுக்கியமான கொள்கைகள் பற்றியும் என்ன போதனை போதிக்கிறதென்பது அவருக்கு குறைவாகத்தான் தெரியுமென்பது வெளிப்படையாகவே தென்பட்டது. இந்த மனிதர், கர்த்தருடைய சபைக்கு விரோதி என்பது விசனப்பட வேண்டிய ஒன்று. கர்த்தரின் சபைக்கு விரோதியென்பவன் கர்த்தருக்கும் விரோதியே. கிறிஸ்து சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று (அப் 9 : 4) ல் சொல்கிறார். உண்மையில் சவுல் சபையைத்தான் துன்பப்படுத்திக் கொண்டு வந்தான். ஆனால் சபையைத் துன்பப்படுத்தினது, கர்த்தரையே துன்பப்படுத்தின தாகச் சொல்லப்பட்டுள்ளது. இது கர்த்தரும், சபையும் எவ்வளவு நெருக்கமாக உள்ளார்களென்பதையே காட்டுகிறது. ஒன்றை எதிர்ப்பது வேறொன்றையும் எதிர்ப்பதற்குச் சமம், அல்லது ஒன்றை எதிர்க்காமல் வேறொன்றை எதிர்க்கமுடியாது.

இந்த மனிதனின் பொய்யான குற்றச்சாட்டுகளை நான் படிக்கும்போது நான் இவ்விதமாகவே எண்ணினேன். அவர் சொல்லியுள்ள காரியங்கள் பற்றி வேதாகமம் பற்றி என்ன சொல்கிறதென்று முழுமையாகத் தெரியாதவர்கள், அவரின் சிறுபுத்தகத்தைப் பார்க்கும்போது, அவரின் எழுத்துகளுக்காக அவரைப் புகழவே செய்வர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப்படிச் செய்து அவர்கள் கர்த்தருடைய சபையையும், அவருடைய போதனைகளையும் எதிர்க்கிறபடியால் கர்த்தரை எதிர்க்கிறவர்களாகவே இருப்பர்.

அந்த எழுத்தாளர், "கிறிஸ்துவின் சபையார் சொல்கிறதென்ன வெனில்" என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுள்ளார். சபைக்கென்று எந்தக் கொள்கையுமில்லையென்பது அவருக்குத் தெரியவில்லை. பாவம்! நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறவர்களைக் கொண்டு அமைக்கப்படுவதுதான் கர்த்தருடைய சபை. கர்த்தரே தமது சபையிலே அவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். (மாற்கு 16 : 15, 16, அப் 2 : 47) ஆகையால், "சபை என்ன போதித்தாலும்" அது, கர்த்தரிடமிருந்து வருகிறதேயொழிய, சபையிடமிருந்தல்ல. வேதம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம்; வேதம் மௌனமாக இருக்கும் இடத்தில் நாங்கள் மௌனமாக

இருக்கிறோம். சபைக்கென்று தனியாக எந்தப் "போதனையும்" கிடையாது.

இந்த மனிதர் பெரிதாக விவாதித்துள்ள வேறொரு காரியம் ஞானஸ்நானம். இவர், எபே 2 : 8, 9 வசனங்களை மேற்கோள் காட்டியுள்ளார். "அங்கு" கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் ..... ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல" என்றுள்ளது. ஞானஸ்நானம் பெற்று, அதற்குப் பலனாக கர்த்தர் அவனை இரட்சிக்க வேண்டும் என்று ஒருவன் எதிர்பார்த்தால், தான் அதைக்குறித்துப் பெருமை பாராட்டிக் கொள்ள, கிரியையினால் இரட்சிப்பைப் பெற முயற்சிப்பதாக, அவர் நினைக்கிறார் போலும். எவ்வளவு தவறான முறையில் இப்பகுதி அர்த்தம் கற்பிக்கப்பட்டிருக்கிறதென்று பாருங்கள். தேவன், நம்முடைய விசுவாசத்தைக் கொண்டு (மனிதபங்கு) அவருடைய கிருபையினாலே (அவர் பங்கு) நம்மை இரட்சிக்கிறார். தேவன் கட்டளையிடுகிறார். நாம் கீழ்ப்படிகிறோம், அவ்வளவே. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற்கு 16 : 16) என்று கிறிஸ்து சொல்லியுள்ளார். ஞானஸ்நானம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்கிற தென்றோ அல்லது விசுவாசத்தினால் மாத்திரம் நாம் இரட்சிக்கப் படுகிறோம் என்றோ அர்த்தம் எங்குமே சொல்லவில்லை. நாம் தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது, அதாவது தேவனை விசுவாசித்து, பாவத்திற்காக மனந்திரும்பி, இயேசு தேவனுடைய குமாரரனென்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால், கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். இவை யனைத்தையும் செய்தபிறகுகூட, இரட்சிப்பென்பது கிருபையினால் தான். நாம் பெருமை பாராட்ட ஒன்றுமே இல்லை. நாம் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும்போது, தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட முடியாது என்பதை தெரிந்துகொள்ளுங்கள். கீழ்ப்படியாமையிலுள்ளவர்களை தேவன் இரட்சிக்க முடியாது.

நம்முடைய நண்பர், வேறொரு குற்றச்சாட்டையும் சுமத்தியுள்ளார். அதாவது, ஒரே ஒரு ஞானஸ்நானம் என்று சொல்கிறது. ஆனால், இந்தக் கிறிஸ்துவின் சபையாரோ, வேறு சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு, மீண்டும் ஞானஸ்நானம் கொடுத்து தங்கள் சபையில் சேர்த்துக் கொள்வார்கள் என்று. வேதாகமம் ஒரே ஒரு ஞானஸ்நானம் பற்றிதான் போதிக்கிறது. இதை முழு மனதோடு ஆமோதிக்கிறோம். ஆனால், பிரச்சனை என்னவென்றால், ஒருவன் வேத

வசனங்களின்படியாக திருமுழுக்குப் பெறாவிட்டால், அவன் ஞானஸ்நானம் பெற்றதாகவே நாம் கருதமுடியாது, ஒருவேளை அவன் எத்தனை முறை முழுகியிருந்தாலும். ஆகையால், ஒருவனை "மீண்டும் ஞானஸ்நானப் படுத்துவது" முடியாத ஒன்று. வேதாகமத்தில் மறுஞானஸ்நானம் என்று எதுவுமில்லை. வேதவசனங்களின்படியாக ஒருவன் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், வசனங்களினடிப்படையில் அவனை ஞானஸ் நானப்படுத்த முடியாது. மாறாக, ஒருவன் தவறான நோக்கங்களுக்காக தண்ணீரில் முழுக்கப்பட்டிருந்தால், வேத வசனங்களின் போதனைப்படி அவன், மீண்டும் முறையாக ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். வேதாகமத் திருமுழுக்கென்பது, கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, அதன் பிறகு அவன், பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது. ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டாயிற்றென்பதற்கு ஒரு சாட்சியல்ல. (எபி 11 : 6. லூக் 13 : 3 ரோம 10 : 10 அப் 2 : 38) வேதாகமத் திருமுழுக்கு, தண்ணீருக்குள்ளாக அடக்கம் பண்ணப்படுதல் (கொலோ 2 : 12, அப் 8). இது ஒருவரை கிறிஸ்துவை தரித்துக்கொள்ளச் செய்கிறது. (I கொரி 12 : 13) வேத வசனங்களின்படியாக திருமுழுக்குப் பெற்றவர்கள். அப்பொழுதே கர்த்தரால் இரட்சிக்கப்பட்டவர்கள் (மாற் 16 : 16) அவனை அவர் தமது சபையிலே சேர்த்துக் கொள்கிறார். (அப். 2 : 47) கிறிஸ்து இல்லாமல், நாம், இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வது முடியாத ஒன்றானபடியாலும், ஞானஸ்நானத்தின் மூலம்தான் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம் என்பதாலும், கலா 3 : 26,27 ஒருவனும் ஞானஸ்நானத்திற்கு முன்பாக இரட்சிக்கப்படுவதில்லை. மேலும் ஒருவன், பிரிவினை சபையிலிருந்தால் கிறிஸ்து இரட்சிக்கப்படுகிறவர்களை பிரிவினை சபையில் சேர்க்காமல், தமது சபையில் மாத்திரம் சேர்ப்பதால் இது, அவன் இரட்சிக்கப்படவில்லையென்பதையே குறிக்கிறது.

இராஜ்யம் என்பது சபைக்கான வேறொரு வார்த்தையென்பது தெரியாமல், நமது நண்பர், வேறொரு தவறையும் குறிப்பிட்டுள்ளார். (மத் 16 :18, 19) (எபி 12 : 28) சபையும் இராஜ்யமும் ஒரே அமைப்புதான் இராஜ்யம் அல்லது சபை இப்பொழுது இந்தப் பூமியில் உள்ளது. கர்த்தருடைய வருகையின் போது, இது தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படும். (I கொரி 15 : 24) வேதாகமம், ஆயிரவருட அரசாட்சி பற்றியோ அல்லது கர்த்தர் திரும்ப வந்து இராஜ்யத்தை நிறுவி, எல்லாவற்றுக்கும் மேலாக பூமியில் ஆயிரம் வருடம் அரசாளுவார் என்றோ எங்கும் போதிப்பதில்லை. அவருக்கு இன்னும் ஒரு இராஜ்யம்

இல்லையென்றால், அவர் எப்படி "இராஜாதி இராஜாவாக" இருக்க முடியும்?

அந்த எழுத்தாளர், சபையின் பெயர் பற்றியும் குறைசொல்லியுள்ளார். கிறிஸ்துவின் சபையார் என நாம் நம்மை அழைத்துக் கொள்வதில் அவருக்கு விருப்பமில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் பவுல் கிறிஸ்துவின் சபையார் என்று எழுதியிருப்பதை ஏற்றுக்கொள்கிறார். (ரோம 16 : 16) ஆனால் பவுல், தேவனுடைய சபை என்று அடிக்கடி நிறைய இடங்களில் எழுதியுள்ளார் எனக்கூறுகிறார். கிறிஸ்துவுக்குச் சொந்தமானது தேவனுக்குச் சொந்தமென்றும், தேவனுக்குச் சொந்தமானது கிறிஸ்துவுக்குச் சொந்தமென்றும் நமது நண்பருக்கு விளங்கவில்லையா? மேலும் வேதாகமம், சபையை, கிறிஸ்துவின் சரீரமென்றும், தேவனுடைய சபையென்றும், முதற்பேரான வருடைய சபை என்றும் இப்படிப் பலவாறாகச் சொல்கிறது. ஆனால், நம்முடைய நண்பர் சார்ந்துள்ள சபைப் பெயராலோ, அல்லது உலகிலுள்ள மனிதர்களால் உண்டாக்கப்பட்ட சபைப் பெயராலோ, எதுவுமே குறிக்கப்படவில்லை. ஆம், "கொரிந்து சபை" என்றும், "எபேசு சபை" என்றும், இன்னும் இப்படி வேதாகமம் சொல்கிறது தான். ஆனால், கொரிந்துவிலும், எபேசுவிலும், மற்ற இடங்களிலும் எந்த சபை இருந்தது? கர்த்தருடைய சபைதான் அங்கிருந்தது. கர்த்தருடைய பெயரைக்கூடத் தரித்துக் கொள்ளாத ஒரு சபையிலே, ஏன் ஒருவன் அங்கமாயிருக்க விரும்ப வேண்டும்?

உண்மையென்னவெனில், தனது சிறிய புத்தகத்தில், நமது நண்பர், நூற்றுக்கணக்கான பக்கங்களுக்குப் பதிலளிக்கப் போதுமான அளவு, தவறுகளைச் சொல்லியுள்ளார். இங்கே சொல்லப்பட்டுள்ள ஏதாவது ஒன்று, அவருக்கு எப்பொழுதாவது சத்தியத்தை அறியும் அறிவைப் பெற்றுக் கொள்ள உதவுமா? என நான் கடுமையாக சந்தேகிக்கிறேன். தவறையே போதிக்க ஒருவன் தனது வாழ்க்கையைச் செலவழித்து விட்டால், அவர் தனது மனதை மாற்றிக்கொள்ள விரும்பமாட்டார். மாறாக, அவர் தனது வழியில் உறுதியாக இருந்து, தொடர்ந்து தவறுகளையே உபதேசித்து, கேட்போருடைய இருதயத்தை வஞ்சிப்பார் என்பதில் சந்தேகமில்லை. (ரோமர் 16 : 17, 18).

நான் இதுகாறும் எழுதின காரியங்கள் அவருக்காக அல்ல. மாறாக இவைகளைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறதென்பதைப் பார்க்க விருப்பத்துடன் திறந்த மனதோடிக்கும் உங்கள் நன்மைக்காகவே. நீங்கள் இந்த மனிதர் என்ன போதிக்கிறார் என்பதை மறந்துவிடுங்கள். நான் சொன்னவைகளையும் விட்டுவிடுங்கள். நீங்களாகவே தயவு கூர்ந்து

வேதாகமத்தை எடுத்து திறந்த மனதோடு வாசித்து தியானியுங்கள். நீங்கள் முயன்றால், புரிந்து, விசுவாசித்துக் கீழ்ப்படிய முடியும். அப்படிச் செய்யும் பொழுது, கர்த்தர் உங்களை இரட்சித்து அவருடைய சபையிலே சேர்ப்பார். அப்பொழுது, என்னுடைய சபையிலோ அல்லது எந்த மனிதனுடைய சபையிலோ, நீங்கள் அங்கமாயிருக்கத் தேவையில்லை. கிறிஸ்துவின் பெயரைத் தரித்து, கிறிஸ்துவுக்கு மாத்திரம் சொந்தமான கிறிஸ்துவின் சபையில் நீங்கள் அங்கமாயிருக்க முடியும். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க முடியும். நீங்கள் அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்ய முடியும். ஒரு நாளில் நீங்கள் பரலோகம் செல்ல முடியும். கர்த்தருடைய வார்த்தையை நாம் விரும்பிப் பின்பற்றும் போது, எவ்வளவு சுலபமாகவும், எளிமையாகவும் இருக்கிறது பாருங்கள்! உங்களுக்காக முயற்சி செய்து பாருங்கள். முடியும்.

EZSR.

J.C. சோட்

# அருமையான வாய்ப்பு

*பரிசுத்த ஆவியானவரின் பணி* (170 பக்கங்கள்) மற்றும் *புதிய ஏற்பாட்டு ஆராதனை* (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம் ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 15

முகவரி : **தமிழ் உலக ஆத்து ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் - 27,
காங்கயம் - 638 701.

குறிப்பு : *தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# பிள்ளைகள் பெற்றோருக்கு என்ன செய்ய வேண்டும்?

பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோரின் கையிலிருக்கிறது. ஒழுக்கத்திலும், கீழ்ப்படிதலிலும் தங்கள் பிள்ளைகளை வளர்க்காத கடமை தவறிய பெற்றோர்கள், தங்கள் வயோதிக காலத்தில் தோல்வியை சந்திப்பதையும், அன்பு, மரியாதை, கீழ்ப்படிதல் போன்ற நற்பண்புகளில் பிள்ளைகளை வளர்த்த பெற்றோர் மிகவும் சமாதானமாக தங்கள் வாழ்க்கையைக் கழிப்பதையும் நம் வாழ்நாள் காலத்தில் பார்த்துக் கொண்டுதான் உள்ளோம்.

குடும்பத்தில் இருக்கும் குழந்தையானது வளரும்போது தன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, மரியாதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். வளரும் இளைஞர்கள் இவ்விரண்டு பண்புகளையும் தங்கள் வாழ்க்கையில் கொண்டிரா விட்டால் அவர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் வாழ்க்கையில் பிரதிபலிக்க முடியாது. இயேசு கிறிஸ்து தாம் வளர்கின்ற வயதில் யோசேப்பு, மரியாள் ஆகிய இவர்களிடம் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது. “பின்பு அவர் அவர்களுடனே கூடப் போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்த சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள். (லூக். 2 : 51). தன்னுடைய பன்னிரண்டு, பதின்மூன்று வயது காலத்தில் அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்” என்று லூக்கா 2 : 52ல் பார்க்கிறோம். தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தன் வாலிப நாட்களில் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் மாத்திரம் இருந்திருப்பாரானால் இன்று இருக்கும் இளைஞர்கள் ஒருவர் கூட நல்லவர்களாக இருந்திருக்க முடியாது. அவர் தன் பெற்றோரின் அதிகாரத்துக்கு கட்டுப்படாமல் தன் மனம் போல் நடந்திருப்பாரானால், உன்னதமான தேவனின் பார்வையிலும், மனிதர் பார்வையிலும் அவர் நம்பிக் கையைப் பெற்றிருக்கவும் முடியாது.

பிள்ளையானவன் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அது ஒரு கட்டளை. அதுவும் சரியான

கட்டளை ஒன்று சொல்லலாம். நாம் யாவரும் அறிவோம், கட்டளை என்பது கட்டாயம் செய்யப்படவேண்டிய ஒன்று என்று. அதுவும் இது இரண்டு வாக்குத்தத்தங்களை உள்ளடக்கிய கட்டளையாகும். அப்போஸ்தலனாகிய பவுல் இதைப் பற்றிக் கூறும்போது, **"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம், உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக, என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக் கிறது."** (எபேசியர் 6:1-3). பெற்றோர்கள் நம்மை தவறான வழியில் நடத்தாத வரை, அவர்களுக்கு கீழ்ப்படிந்திருப்பதென்பது சரியான, நீதியான ஒன்றாகும்.

தேவன் ஒருபோதும் எந்த இடத்திலும், பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுக்கு கீழ்ப்படிந்திருங்கள் என்றோ, பூமியிலே உங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கு பிள்ளைகள் சொல்படி கேட்டு நடங்கள் என்றோ கூறவில்லை. ஆனால், நாகரீகம் என்ற போர்வையில் வாழும் அநேக குடும்பங்களில் இதுதான் நடைமுறையில் உள்ளது. பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பேச்சுக்கு பயப்படுகிறவர்களாகவே இருக்கிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தக் கூடாது என்று தீர்மானமாக இருக்கிறார்கள். பிள்ளைகளால் ஆளப்படுகிற குடும்பங்களும் இன்றைய நாட்களில் நிறைய உண்டு. இது தேவனுடைய கட்டளைக்கு நேர் விரோதமானது.

வளர்ந்த பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் மீது மதிப்பும், மரியாதையும், அன்பும், கரிசனையும், உள்ளவர்களாயும், பொருளாதார உதவி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும். இவையனைத்தும் ஏதோ சில குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் செய்யப்பட வேண்டிய ஒன்று அல்ல. இதைப்பற்றி தேவனுடைய ஆலோசனை என்னவென்றால், அது வாழ்நாட்கால முழுவதும் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டமாகும். பெற்றோரை விட்டு தனியே வாழும் அநேக பிள்ளைகள், கடிதத்தின் மூலம் பெற்றோரை தொடர்பு கொள்வதோ, அல்லது அவர்களை வந்து சந்திப்பதோ, அல்லது பெற்றோரை தங்கள் வீட்டிற்கு அழைப்பதோ இல்லாமல் அமைதியாக இருந்து விடுவதை நாம் அநேக குடும்பங்களில் கண்கூடாக பார்க்கிறோம். அப்படிப்பட்ட பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கண்ணீரோடே கல்லறைக்கு அனுப்புகிறவர்களாகவே இருப்பார்கள். தங்கள் பெற்றோர் மரித்த பிறகு வந்து நீண்ட நேரம் அழுவதும், அவர்களுக்கு பளிங்கு கற்களால் கல்லறை கட்டுவதும் பெற

றோருக்குச் செய்யும் நன்றிக்கடன் ஆகாது. ஆகவே, உங்கள் வயதான பெற்றோர் இன்னும் உயிரோடு இருப்பார்களானால் அவர்களை இன்றே உங்கள் வீட்டிற்கு அழையுங்கள். அவர்களோடு விருந்துண்டு மகிழுங்கள். அலு வலக வேலைகள், குடும்ப பாரங்கள் தூரம் போன்ற இவைகளை பெரிதாகச் சொல்லி காலத்தை கழிக்க வேண்டாம். பிள்ளைகளின் சத்தத்தை கேட்கும் காதுகளிருக்கும் போதே, பேச்சினால் அவர்கள் உள்ளத்தை குளிர வைக்க வேண்டும். பிள்ளைகள் எழுதிய கடிதத்தை படிக்கும் திறனை கண்கள் இழக்கும் முன்பே அடிக்கடி கடிதம் எழுதி அவர்கள் நலனை விசாரிக்க வேண்டும். பூக்களால் அலங்கரிக்கப்பட்ட வண்டியிலேற்றி கல்லறைக்குப் போகு முன்பு அன்பு, கரிசனை, அக்கறை இவைகளை பெற்றோரின்மேல் செலுத்தாமல், காலம் கடந்த பின் பல செலவுகள் செய்தாலும் எந்தப் பிரயோஜனமு மில்லை.

உண்மையாகவே தங்கள் பெற்றோரை நேசிக்கும் பிள்ளை அவர்கள் கவலைப்பட இடங்கொடுக்கவே கூடாது. இதைப் பற்றி வேதாகமம் கூறும் ஆலோசனையைப் பார்ப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கு புத்தி சொல்லும்போது, "விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேர்த்திகளாவதுஇருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றோர் செய்த நன்மைகளுக்குப்பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக் கொள்ளக் கடவர்கள்; அது நன்மையும், தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது. ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்". (I தீமோத் 5 : 4, 8) ஆம், நம் அன்பையும், இரக்க குணத்தையும் வெளிக்காட்ட இது ஒரு நல்ல செயலாகும். நம் செயலின் மூலம் பெற்றோருக்கு உதவி செய்வதை தேவனும் வெகுவாக அங்கீகரிக்கிறார். அவர்கள் நமக்குச் செய்த யாவற்றிற்கும் பதிலுதவியாக இது அமைகிறது. பெற்றோர் அத்தியாவசியத் தேவையில் இருக்கும் போது அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஒருவன் தான் ஏற்றுக் கொண்ட விசுவாசத்தை மறுதலிப்பது போன்றதாகும். சில சமயங்களில் கிறிஸ்தவரல்லாதவர்கள் கூட வயதான தங்கள் பெற்றோரையும், பெற்றோரின் பெற்றோரையும் அக்கரையுடன் கவனித்துக் கொள்கிறார்கள்.

குடும்பத்தில் பிறந்த எந்தப் பிள்ளையும் தங்கள் பெற்றோருக்கு எல்லா வகையிலும் கடமைப்பட்டிருக்கிறான். நம் சக

வயதுடைய நண்பர்களைக் காட்டிலும் அதிகமான நன்றிக் கடனைப் பெற்றுக் கொள்ள நம் பெற்றோர்களே தகுதி வாய்ந்த வர்கள். நண்பர்கள் அல்ல, பெற்றோரே உங்களை இந்த உலகிற்கு கொண்டு வந்தவர்கள். தனக்குத் தானே எந்த ஒரு உதவியும் செய்து கொள்ள முடியாத குழந்தையாய் இருந்த போது, உங்கள் நண்பர்கள் அல்ல, உங்கள் பெற்றோரே எல்லாக் கரிசனையோடும் உங்களைப் பார்த்து வளர்த்தவர்கள். சரீர வளர்ச்சிக்கு வேண்டிய உணவுக ளை கொடுத்ததும், சுகவீனமாய்ப் படுக்கையில் இருந்தபோது மருந்துகளை அளித்ததும், நீங்கள் இப்போது பெற்றிருக்கிற கல்வித் தகுதிகளைக் கொடுத்ததும், உங்கள் நண்பர்கள் அல்ல, உங்கள் பெற்றோரே. எந்த நண்பர்கள் உங்களுக்காக பல மணி நேரங்கள் கண்விழித்து உங்களை பாதுகாத்து வளர்த்தது? உங்கள் பெற்றோர் மட்டும்தான். எந்த ஒரு பள்ளி (அல்லது) கல்லூரி நண்பன், உங்கள் படிப்பிற்க்காகவும், உடைக்காக வும், உங்கள் தேவைகளுக்காக வும் பணம் கொடுத்தான்? உங்கள் பெற்றோரே, உங்கள் நிமித்தம் மகிழ்ந்து போய், உங்களுக்கு இவைகளைச் செய்தார்கள்.

இவை யாவுக்கும் பதிலாக, அவர்கள் பிள்ளைகளிடம் எதிர் பார்ப்பது இவைகள் தான். ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழ்கிற வாழ்க்கை, நாம் தேர்ந் தெடுத்திருக்கும் வேலையில் சந்தோஷமாக இருப்பது, திருப்தி கரமான திருமண வாழ்க்கை, அதோடு தங்களிடம் தொடர்ந்து அன்பும், மரியாதையும், காட்டு வது. நண்பர்களின் சாவகாசம் நல்ல சூழ்நிலை இருக்கும்போது மட்டும் பூத்து, குலுங்கி கனிதரும். நிலை மை மோசமாகும்போது தானாக பின்னுக்கு விலகி மறைந்து விடுவதாக இருக்கும். தேவன் ஒருபோதும் உங்கள் நண்பர்களுக்கு கீழ்ப்படிந் திருங்கள் என்று கட்டளை கொடுக்கவில்லை. ஆனால் பெற்றோருக்கு கனத்தையும், கீழ்ப்படிதலையும் செய்யுங்கள் என்று கட்டளை கொடுத்துள்ளார். எனவே இது பிள்ளைகள் மேல் விழுந்த கடமை. இதை செய்து முடித்தே ஆக வேண்டும். பெற் றோர்களை கனப்படுத்த வேண்டு மென்ற தேவச் சட்டம், பெற்றோர் உயிருடன் இருக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்துகிற தாகவே உள்ளது. ஒரு வேளை அவர்கள் மரித்தாலும் கூட, நம் முடைய நினைவுகளால் அவர் களை கனப்படுத்த வேண்டும். கிறிஸ்து எந்தக் குடும்பத்தில் உள்ளாரோ, அந்த குடும்பத்தின் பிள்ளைகள், இதை பெற்றோருக் குச் செய்வார்கள். கிறிஸ்துவின் போதனைகள் அதற்குத் தூண்டு கோலாக இருக்கும். ஆகவே, பிள்ளைகளை கர்த்தருடைய வளர்ப்பில் வளர்ப்போம்.

**RR நாயகம்.**

# "துணப்படு பாவி"

"அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின் படியே உங்களுக்குக் கொல்லுகிறேன்" என்றார்.

தேவன் சிருஷ்டிகர்த்தர்!
தேவனுடைய கிருபை அளவற்றது.
தேவனுடைய அன்பு மகத்தானது.

தேவன் எல்லா மனுஷனும் இரட்சிக்கப்பட வேண்டும். சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும் என்பதில் சித்தமுள்ளவராயிருக்கிறார். (I தீமோ. 2 : 4).

ஒரு மனுஷன் இரட்சிக்கப்படுவதும், சுகமடைவதும் இரண்டு காரியங்களை உள்ளடக்கியுள்ளது. ஒன்று தேவனுடைய பங்கு – அடுத்து மனிதனுடைய பங்கு – தேவனுடைய செயல்பாடு – அடுத்து மனிதனுடைய செயல்பாடு அதைத்தான் இங்கு சொல்லுகிறார். அநேகம் குஷ்டரோகிகள் இருந்தாலும் – இந்த நாகமான் மாத்திரமே – தன் சுகத்திற்காக செயல்பட்டான், சுகத்தைப் பெற்றான்.

இரட்சிப்பு இலவசமானது தான். ஆனால் தாகமாயிருக்கிறவர்கள், தண்ணீர்களண்டைக்கு வரவேண்டும்; வந்து வாங்கி சாப்பிட வேண்டும். (ஏசாயா 55 : 1) இப்பொழுது நாகமானைப் பார்ப்போம் இவன் யார்?

- படைத்தலைவன்
- தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷன்
- எண்ணிக்கையுள்ளவன்
- சீரியாவுக்கு இரட்சிப்பை கட்டளையிட்டவர்

மகா பராக்கிரம சாலி
ஆனால் குஷ்டரோகி

குஷ்டரோகம் என்பது ஒரு கொடிய வியாதி. தன் சரீரத்தை சீர்குலைக்கும் ஒரு வியாதி மாத்திரமல்ல. மரணமட்டும் அவனை அது சேதப்படுத்தும்.

லேவி 13, 14–ம் அதிகாரங்களில் குஷ்டரோகத்தைப் பற்றிய பிரமாணங்கள் காணப்படுகிறது.

நாகமானுக்கு இவ்வியாதி ஒரு பெரிய மனசஞ்சலத்தையும், வருத்தத்தையும் உண்டாக்கினபடியால் அவன் எவ்வளவோ செலவழித்தான், எங்கெல்லாமோ வைத்தியம் பார்த்தான். ஆனாலும் சுகமே கிடைக்கவில்லை.

இறுதியில், ஒரு இஸ்ரேலிய வேலைக்கார சிறுமி மூலமாக எலிசா என்ற தேவ மனுஷனைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் போகிறான்.

அங்கே, அவன் 3 தவறுகளைச் செய்தான். அவைகளைப் பார்ப்போம்.

## I. நான் என்னுடைய சுகத்தை விலைக்கு வாங்கப் போகிறேன். (II ராஜா. 5:1-5)

750 பவுண்டு வெள்ளி
150 பவுண்டு தங்கம்

10 மற்றும் வஸ்திரங்கள் ஆகியவைகளை யார் அவனை சுகப் படுத்துகிறார்களோ அவர்களுக்கென்று கொண்டு போகிறான்.

சிலர் இப்படிதான் தேவனைத் தேட முயலுகின்றனர். மத் 22 : 29 இயேசு சொன்னார். நீங்கள் "....வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்கிறீர்கள்" என்று.

## II. நான் என்னுடைய சுத்தத்தை ஒரு மனிதனிடமிருந்து பெறப் போகிறேன். (வசனம் 6, 7)

இஸ்ரேலிய ராஜாவாகிய யோராமிடம் போய் கடிதம் வாங்கிக் கொண்டு வருகிறான். மனிதன் மூலமாக தேவன் இன்றைக்கும் செயல்படுகிறார். ஆனால், மனிதன் மூலமாக இரட்சிப்பு கிடையாது. மனிதன் மீது நம்பிக்கை வைக்காதீர்கள். எந்த மனுஷனும் நிலையானவனல்ல. அவன் பொய்யன். மாயைக்கு ஒப்பானவன். தன் இருதயத்தையே சார்ந்து வாழ்பவன், தன் வாழ்வின் வசதிக்கேற்ப சத்தியத்தை மாற்றிக் கொள்பவன்.

## III. இந்த மாதிரியான ஒரு வழி என் மனதில் இல்லையே (வசனம் 11) ஏசா 55 : 8.

அநேகம் சமயங்களில் தாங்கள் நினைத்திருக்கும் வழிக்கு மாறாக தேவனுடைய வழியிருக்கும்போது அவர்கள் ஆத்திரப்படுகின்றனர். அதை ஏற்க மறுக்கின்றனர். (உ.ம்) எரே 36 : 22, 23 யோயாக்கீம் ராஜா. ஆண்டவருடைய காலத்தில் பரிசேயர்கள் அவர்களுடைய வழி

கர்த்தருடைய வழியைப் பார்க்கிலும் மாறுபட்டிருந்தது. ஆகவேதான் ஆத்திரமும் எரிச்சலுமடைந்து ஆண்டவரை கொலை செய்தனர்.

இந்த நாகமானுடைய சம்பவத்திலிருந்து நாம் பெறும் பாடம் எவையென்றால் :

A. நாம் ஒரு வியாதியஸ்தன் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். ஒரு பாவி தன்னை சுயநீதியில் மறைத்துக் கொள்ள கூடாது.

B. சத்தியத்தை கேள்விப்படாத வரையிலும் நம்முடைய இரட்சிப்புக்கான வழியை நாம் கண்டுபிடித்தல் முடியாது.

C. நாம் நம்முடைய வழியை விட்டு தேவனுடைய வழியில் நடக்க நம்மை ஆயத்தப்படுத்தும் வரையில் நம்முடைய ஆத்துமா சுத்தமடையாது.

D. நாம் முழுமையாக சுத்தமடைய தேவன் நம்மிடத்தின் எதைச் செய்ய கேட்கிறாரோ அதை நாம் செய்தாலொழிய சுகம் கிடைக்காது. அவர் விசுவாசம் + கீழ்ப்படிதலைக் கேட்கிறார். இதற்கு அதிகமாகவும், இதற்கு குறைவாகவும் அல்லது இதையல்லாமல் வேறு எதையும் அவர் நம்மிடத்தில் கேட்கவில்லை.

ஆகவே, நம்முடைய தேவன் பாவத்திலிருந்து நாம் குணப்பட என்னவெல்லாம் செய்ய வேண்டுமென வசனத்தில் சொல்லியுள்ளாரே அதன்படி செய்து குணப்படுவோம்.

**VDD,**
*திருச்சி*

# வெற்றிக்கு "முதல்" ஐந்துகள்

1. *நாளின் "முதல் மணி" நேரத்தை தேவனுக்குக் கொடுங்கள்.*
2. *வாரத்தின் "முதல் நாளை" தேவனுக்குக் கொடுங்கள்.*
3. *வருமானத்தில் "முதல் பகுதியை" தேவனுக்குக் கொடுங்கள்.*
4. *முடிவுகள் எடுக்கும்போ, முதலாவது தேவனுக்கு முன்னுரிமை கொடுங்கள்.*
5. *உங்கள் இருதயங்களில் "முதல் இடத்தை" தேவனுக்குக் கொடுங்கள்.*

**"இப்படிச் செய்தால் பலன் உண்டு"**

# பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்கு

ஒருவேளை, மிகவும் அதிக சர்ச்சைக்குரிய காரியங்களில் திருமுழுக்கும் ஒன்று என்று கூறலாம். இருந்தபோதிலும், அது வேதாகம, நற்செய்தியின் கட்டளைகளில் ஒன்றாகும். பிற கட்டளைகளை விட இது அதிக முக்கியத்துவம் பெற்றதாக இல்லையென்றாலும், பிற கட்டளைகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் உள்ள கட்டளை இது. ஏதாவது ஒரு கட்டளை மட்டும் இரட்சிப்பதில்லை; ஆனால் மாறாக, எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதே, ஒவ்வொருவரும் தேடும் இரட்சிப்பைக் கொண்டு வருகிறது.

இந்தப் பாடத்தில், திருமுழுக்குப் பற்றி எவ்வளவு அதிகமாக அறிய முடியுமோ அவ்வளவு அறிய முயற்சிப்போம். அதின் பொருளைத் தீர்மானிக்கும் முயற்சியிலிருந்து ஆரம்பிக்கலாம். அநேகமாக இது எளிது. திருமுழுக்கு என்பது "பாப்டிஸோ" என்னும் கிரேக்க பதத்திலிருந்து வந்தது. அதற்கு முழுக்குதல், அமுக்குதல், அடக்கம் செய்தல் என்ற அர்த்தங்கள் உள்ளன. சுவிசேஷம் இதை ஏற்றுக் கொண்டுள்ளது. கவனியுங்கள் : "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். "(ரோமர் 6 : 3, 4). "ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்." (கொலோ 2 : 12). ஆனால் , தெளித்தலையும், ஊற்றுதலையும் பற்றி என்ன? அவை மனிதர்களுடைய செயல்கள் என்று ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவை. முழுக்குதலை அகற்றி, அதற்கு மாற்றாக அவை அறிமுகப்படுத்தப்பட்டன. தேவனுடைய வசனத்தை கனம் பண்ணுகிறவர்கள் இவற்றை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அடுத்து, வேதாகமத்தில் வித்தியாசப்பட்ட பலவித திருமுழுக்குகளைப் பற்றி நாம் படிக்கிறோம். ஆனால் மறுபுறத்தில்,

எபேசியர் 4 : 5ம் வசனத்தில் ஒரே திருமுழுக்கு மட்டுமே உண்டு என பவுல் எழுதினார். இப்போது, இவற்றில் இன்று நம்மைக் கட்டுப்படுத்துவது எது? அப்போஸ்தலருடைய நடபடிகள் 8 : 26–36 வசனங்களில் எத்தியோப்பிய மந்திரியை சந்தித்த பிலிப்பு பற்றிய சம்பவத்தைப் பார்க்கிறோம். கிறிஸ்துவையும் அவருடைய கட்டளைகளையும் பற்றி அம்மனிதனுக்குப் பிலிப்பு கற்றுக் கொடுத்திருந்த பின்னர், அவன் திருமுழுக்குப் பெற விரும்பினான். வேதாகமம் கூறுகிறது : "இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்". (அப். 8 : 36–39).

இப்போது நாம் சில காரியங்களைக் கவனிப்போம்.

1. இம்மனிதன் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலின் உச்சகட்டமாக திருமுழுக்கு அமைந்தது.

2. அது ஒரு அடக்கம், அதாவது தண்ணீரில் அடக்கம் என நாம் அறிகிறோம்.

3. எனவே இக்காரியத்தில் முற்றிலுமாக எவ்விதப் புரட்டும் இருக்க முடியாது. பின்னர், அவர்கள் இருவரும் தண்ணீருக்குள் சென்றனர் என வசனம் கூறுகிறது. அதை இன்னும் தெளிவுபடுத்திக் கூற, பிலிப்பும் மந்திரியும் தண்ணீருக்குள் சென்றனர் என்பதைச் சொல்லுகிறது. இறுதியில், திருமுழுக்குப் பெற்ற பின்னர் இருவரும் தண்ணீரிலிருந்து வெளியே வந்தனர் என்று கூறுகிறது. இவ்வளவு தெளிவான காரியத்தில் சர்ச்சைக்கு இடமேது? யார் வேறு விதமாகக் கூற முடியும்? நிச்சயமாக, கர்த்தருடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொள்ளும் யாரும் சர்ச்சை செய்யமாட்டார்கள்.

அடுத்து, யோவான் 3 : 3–5 வசனங்களுக்கு நாம் திருப்பும் போது, அங்கு சுவிசேஷம் கூறுகிறது : "இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக :

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு : ஒரு மனிதன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக : ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். "இப்போது, ஒருவனுடைய இரட்சிப்பில் தண்ணீருடைய பங்கு என்ன? பதில் மிக எளிது: அது திருமுழுக்கிற்குத் தேவை. குறிப்பாக அதைப் பற்றியே இங்கு பேசுகிறோம். தேவனுடைய வார்த்தையின் வழியாக ஆவியானவர் ஒருவனை வழிநடத்தும்போது, திருமுழுக்கு மூலமாக ஒருவன் மீண்டும் பிறக்கிறான். (1 பேதுரு 1 : 23). இச்செயல் ஒருவனை கர்த்தரின் ராஜ்யத்திற்குள் அல்லது கிறிஸ்துவின் சபைக்குள் சேர்க்கிறது என்பது, I கொரி. 12 : 13; ரோமர் 6 : 3, 4 ஆகிய சுவிசேஷ வசனங்களோடு ஒத்துப் போவதை நாம் அறிகிறோம்.

மீண்டும், தீத்துக்கு பவுல் எழுதும்போது : "நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து 3 : 5) என்றார். இந்த மறு ஜென்ம முழுக்கு என்பது திருமுழுக்குக்குப் பயன்படும் தண்ணீரையே குறிப்பிடுகிறது என்பதை இங்கு அவர் திட்டவட்டமாகக் கூறிக் கொண்டிருக்கிறார். எனவே, திருமுழுக்கு என்பது ஒரு அடக்கம்; அது தண்ணீரில் அடக்கம்; இந்த ஒரே சுவிசேஷத் திருமுழுக்கு மட்டுமே இன்று செல்லத்தக்கதாகும்.

திருமுழுக்கு என்ன செய்கிறது என்பதைப் பற்றி பல வசனங்களை நாம் படிக்கும்போது, திருமுழுக்கின் முக்கியத்துவத்தை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, அது இரட்சிக்கிறது : "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது". (1 பேதுரு 3 : 21). திருமுழுக்கு மட்டுமே இரட்சிக்கிறது என்று அப்போஸ்தலர் சொல்லவில்லை. ஆனால் கர்த்தர் தமது வசனங்களில் கற்பித்தவைகளையும் கடைபிடிக்கும் போது, திருமுழுக்கு நம்மை நிச்சயமாக இரட்சிக்கிறது. மீண்டும், கிறிஸ்துதாமே கூறுகிறார் : "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்

இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." (மாற்கு 16 : 16). திருமுழுக்கு எப்போது இரட்சிக்கிறது? ஒருவன் விசுவாசித்து, திருமுழுக்குப் பெறும் போது இரட்சிக்கிறது. அதைத் தள்ளி விடுதல், கிறிஸ்துவைத் தள்ளி விடுவதற்குச் சமம்.

அடுத்தபடியாக, பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குத் தேவை. "பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப். 2 : 38). தனது பாவங்கள் கழுவப்பட, திருமுழுக்குப் பெற வேண்டுமென சவுலுக்குக் கூறப்பட்டது. கவனியுங்கள்: "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்". (அப். 22 : 16). மீண்டும், அது கர்த்தருடைய ஒரு கட்டளையாக இருக்கிறது : "கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். . . " (அப். 10 : 48).

இரட்சிப்பு, பாவமன்னிப்பு போன்ற காரியங்களைத் தவிர இந்தக் கீழ்ப்படிதல் மூலமாகத் தான் கிறிஸ்துவின் இரத்தத்தோடு ஒருவன் தொடர்பு கொள்ளுகிறான்; அதுவே உண்மையில் ஒருவனை பாவமன்னிப்பு அடையச் செய்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பாவங்களின் மன்னிப்புக்கென்று சிந்தப்பட்டதாக மத்தேயு 26 : 28ம் வசனம் கூறுவதைப் பார்க்கிறோம். ஆனால், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு மக்களிடம் பேசும்போது, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால், அவர்கள் மனஸ்தாபப்பட்டு, திருமுழுக்குப் பெற வேண்டுமென்று கூறினார். அதாவது, இந்த எளிய கட்டளைகளுக்கு ஒரு மனிதன் கீழ்ப்படியும் போது, கிறிஸ்துவின் இரத்தத்துடன் அவன் தொடர்பு கொள்ளுகிறான். அதின் விளைவாக அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. மீண்டும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக ஒருவன் பாவமன்னிப்பு அடைகிறான் என்பதாக எபேசியர் 1 : 7; கொலோசெயர் 1 : 4 ஆகிய வசனங்களில் நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனால், தனது பாவங்கள் கழுவப்பட அல்லது மன்னிக்கப்பட, திருமுழுக்குப் பெற வேண்டியது அவசியம் என சவுலுக்குச் சொல்லப்பட்டது. இவ்வாறாக, திருமுழுக்கு என்னும் செயலின் மூலமாக, பாவங்களைக் கழுவக்கூடிய கிறிஸ்துவின் இரத்தத்துடன் ஒருவன் தொடர்பு கொள்ளுகிறான் என்பது மீண்டுமாகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ரோமர் 6ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின்

மரணத்திற்குள் நாம் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக சொல்லப் பட்டிருக்கிறது; அதாவது, கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதின் மூலம், நாம் கர்த்தரின் மரணத்தின் பலன்களை, அதாவது பாவங்களின் மன்னிப்பை, நாம் அடைகிறோம்.

மேலுமாக, திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவை நாம் அடைகிறோம் என நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. பவுல் தமது கலாத்திய நாட்டு சகோதரர்களுக்கு எழுதும்போது, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே, (கலா. 3 : 26, 27) என்றார்.

மீண்டும், திருமுழுக்கு மட்டுமே இரட்சிக்காது; இரட்சிக்க இயலாது என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம். அதே சமயத்தில், திருமுழுக்கு இல்லாமல் ஒருவரும் இரட்சிப்படைய முடியாது. ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்ட பின்னர், திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுவதாக சுவிசேஷம் எங்கும் போதிக்கவில்லை. திருமுழுக்கு என்றால் என்ன என்பதை ஒருவர் புரிந்து கொள்ளுவதோடு, அதின் அவசியத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதர் பலதடவைகள் முழுக்கப்பட்டிருக்கக் கூடும், ஆனாலும் சரியான காரணத்திற்காக ஒரு தடவையேனும் முழுக்கப்படாதிருந்தால், பின்னர் சுவிசேஷத்தின் படியான திருமுழுக்கை அவர் ஒரு போதும் பெறவில்லை. ஒரே திருமுழுக்கு மட்டுமே உண்டு; அதுவே வேதாகமத்தில் காணப்படுகிறது; பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, அது தண்ணீரில் அடக்கம் செய்யப்படுவதாக இருக்க வேண்டும். அதோடு, வேதாகமத்தில் நாம் படிக்கிற பிரகாரமாக ஒரு மனிதனை அது சபைக்குள் சேர்ப்பதாக இருக்க வேண்டும். இல்லாத பட்சத்தில், அது வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கும்.

திருமுழுக்கு ஒரு மனிதனை இரட்சிப்பது எப்போது?கிறிஸ்துவின், கலப்படமற்ற உண்மையான நற்செய்தியைக் கேட்டு, அதை விசுவாசித்து, உண்மையிலேயே தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, இப்படியாக சுவிசேஷத்தின்படியான திருமுழுக்கைப் பெறும்போது ஒருவன் இரட்சிக்கப்படுகிறான். அப்படி செய்தால் மட்டுமே திருமுழுக்கு இரட்சிக்கிறது. வேறுவிதமாகக் கூறினால், கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வரும் மாற்றத்தைச் செய்யக்கூடிய கீழ்ப்படிதலின் கடைசி செயல் திருமுழுக்கு ஆகும்.

ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய சபைக்குள்ளும் வழிநடத்தும் பலபடிகளில் இதுவே இறுதியான படியாகும்.

கடைசியாக, திருமுழுக்குத் தண்ணீரில், திருமுழுக்குச் செயல் மூலமாக ஒரு மனிதன் கர்த்தரோடு அடக்கம் செய்யப்படுகிறான். அதன்பின்னர், தண்ணீராகிய கல்லறையிலிருந்து, அவன் புது ஜீவனுடன் நடப்பதற்காக, உயிர்த்தெழுகிறான். இது கர்த்தரின் அடக்கத்தையும் அவருடைய உயிர்ப்பையும் சித்தரித்துக் காட்டுகிறது. நிச்சயமாக, கர்த்தருடைய வழியைக் காட்டிலும் சிறப்பான வழி எதுவும் நமக்கில்லை. ரோமர் 6ம் அதிகாரத்தைப் படியுங்கள்.

**J.C. சோட்.**

# தெரிந்து கொள்ளுங்கள்

## சிமிர்னா

1. *கி.மு. 1000-ல் இந்தப் பட்டணம் செழிப்பாக இருந்தது.*
2. *கி.மு. 600-ல் இது அழிந்தது.*
3. *கி.மு. 301-ல் மகா அலெக்ஸாண்டர் மீண்டும் இதை கட்டினார்.*
4. *இன்றைக்கு இதனை பெயர்* IZMIR
5. *ரோம அரசாங்கத்தின் நேச நாடு இது.*
6. *அரசர்களை வணங்கும் முறை இங்கு இருந்தது.*
7. *ரோம அரசாங்கத்தினர் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினர்.*
8. *பவுல் இங்கு கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்தார்.*

*வெளி. 2 : 8-11*

# ஆவியின் கனி

## சந்தோஷம்

சந்தோஷம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. ஒருவன் எடுத்துக் கொள்ளும் எல்லா பிரயாசத்திலும் அவன் எதிர்பார்க்கும் பலன் சந்தோஷமே. சந்தோஷமாக இருப்பதற்காக பலர் பலவழிகளில் பிரயாசப்படுகிறார்கள். சினிமா பார்ப்பது, மது அருந்துவது, புகைப்பிடிப்பது, போன்று தங்களுக்கே கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதும், தங்களுடைய சுய நல சந்தோஷத்திற்கென்று மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை எண்ணாமல், பல இழிவான செயல்களில் ஈடுபடுவதும் சந்தோஷத்தை தருவதாக எண்ணுகிறார்கள். இவைகளால் நிலையான சந்தோஷத்தை ஒருபோதும் பெறமுடியாது. ஒருவேளை இவைகளால் தற்காலிகமான சந்தோஷத்தை அடைந்தாலும் பின்பு அது மனதுக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தும். இவ்விதமான சுயநல சந்தோஷத்தை அடைய எண்ணுவோர் அனேகருக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தும் கொடியவர்களாக மாறிடுவார்.

சிலர் தங்களுக்கே நலமாக தோன்றும் வழிகளில் நிலையான சந்தோஷத்தை பெற பிரயாசப்படுகிறார்கள். இவ்வுலகில் மனுஷனுடைய வாழ்க்கை நிலையற்றதாய் இருப்பது போன்றே அவனுடைய பிரயாசங்களும், மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது. ஆனால் நிலையானவர் தேவன் ஒருவரே. அவரே மனுஷனை இம்மண்ணில் உண்டாக்கினவர். அவராலேயன்றி நிலையான சந்தோஷத்தை எவராலும் தர இயலாது.

நிலையான சந்தோஷத்தை அடைய இன்னும் பலர் பல வழிகளை பின்பற்றி செல்வதுண்டு. ஆனால் "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி. 14 : 12) சந்தோஷம் தேவனால் கிடைக்கும் ஆசீர்வாதம். அதை அவருடைய வழிகளில் மட்டுமே பெற முடியும். மனுஷருடைய எண்ணத்தின்படியோ வழிகளின்படியோ அதைப் பெற முடியாது. காரணம்! "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா. 55 : 8).

அநித்தியமான பாவ சந்தோஷத்திற்காக பல தீமையான செயல்களுக்கு அடிமைகளாகி சஞ்சலத்தால் தவிக்கின்றீர்களா? நிலையான சந்தோஷத்தை நாடி தேடுகின்றீர்களா? ".... பயப்படா

திருங்கள். இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், கர்த்தராகிய கிறிஸ்து என்றும் இரட்சகர் உங்களுக்காக பிறந்திருக்கிறார்'' (லூக் 2 : 10 – 11).

இயேசுவே எல்லா ஜனத்துக்கும் நிலையான சந்தோஷத்தை தருபவர். வேத வசனமே உண்மையான சந்தோஷத்திற்கு அவர் காட்டும் வழி. இயேசு : "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை (வேதவசனங்கள்) உங்களுக்கு சொன்னேன்'' என்கிறார் (யோ 15 : 11) (யோ 15 : 1–11 வரை வாசிக்கலாம்). மனுஷன் நிலையான மற்றும் நிறைவான சந்தோஷத்தை பெற இயேசுவோடு இசைந்து வாழும்படி உபதேசிக்கின்றார். அவரோடு இசைந்து வாழ அவரை முழு மனதோடு விசுவாசித்து, இதுவரை செய்து வந்த பாவ வாழ்க்கைக்கு முடிவை ஏற்படுத்தி மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று சுத்தமாக்கப்பட வேண்டும். தேவன் பாவமற்றவராய் இருக்கின்றார். அவரோடு இசைந்து வாழ பாவமற்ற நிலையை அடையவேண்டும். இவைகளை செய்பவனுக்கே தேவன் உண்மையான சந்தோஷத்தை தருகிறார். 'பிலிப்பு என்னும் ஒரு மந்திரி இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றதினால் அவன் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்'' (அப். 8 : 37–39). இது அநித்தியமான உலக சந்தோஷமல்ல. நித்தியமான பரலோக சந்தோஷம், பாவமன்னிப்பு பெறுகிறவனால் பரலோகத்திலும் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று இயேசு சொல்லுகிறார் (லூக் 15 : 7). இந்த சந்தோஷம் கர்த்தருடைய வசனத்தாலே உண்டாகும். "கர்த்தருடைய நியாயங்கள் (வேத வசனங்கள்) செம்மையும், இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது.

" . . . (சங் 19 : 8) எரேமியா தீர்க்கதரிசி உண்மையான சந்தோஷத்தை பெற்ற அனுபவத்தை கூறுகிறார். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; . . . . (எரே. 15 : 16). இதுவே ஆவியின் கனியான சந்தோஷம் : இவ்விதமான சந்தோஷத்தை நீங்கள் எப்பொழுதாவது பெற்றதுண்டா? நிலையான சந்தோஷத்தை பெற விரும்புவீரானால் கர்த்தருடைய வார்த்தைகளை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளுங்கள்.

"நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல. அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். (யாக் 1 : 22).

"தேவ கிருபை உங்களோடு இருப்பதாக'' (தொடரும் . . . . .)

**ஹென்றி மோகன், நீல்கிரீஸ்**

# கிறிஸ்தவர்களுக்கு பாடுகள் உண்டா?

நம்து தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் மார்க்கமே, அவருடைய தியாகத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. கிறிஸ்து நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தும்; அவரைப் பிடித்து அவமானப்படுத்தி, சிலுவையில் அறைந்து கொன்றார்கள். கிறிஸ்துவின் சீஷர்களும், அப்போஸ் தலர்களும், வெகுவாய் துன்புறுத்தப்பட்டார்கள். அநேக கிறிஸ்தவர்கள் உயிர்தப்ப தூர இடங்களுக்கு ஓடிப்போனார்கள். போன இடங்களில் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்தார்கள்.

அநேக கிறிஸ்தவர்களை காவலிலும் கொலையும் செய்தார்கள் சிலர் நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும் அநுபவித்தார்கள். இன்னும் சிலர் கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள். பரீட்சை பார்க்கப்பட்டார்கள். பட்டயத்தினால் வெட்டப்பட்டு, கல்லெறியுண்டு மரித்தார்கள். எபி 11 : 37.

கிறிஸ்தவர்களுக்கு ஏன் இந்த அவல நிலை? கிறிஸ்துவின் கட்டளையே, "கிறிஸ்தவனாக தீங்கு அநுபவி" என்பதாகும். இது தேவனுடைய சித்தம், அதற்கு கீழ்ப்படிவது நம் முக்கிய கடமையாகும். கிறிஸ்தவனாக பாடு அநுபவித்தால், கிறிஸ்துவோடு கூட ஆளுகை செய்வோம் என்று தேவனுடைய வசனம் கூறுகிறது II தீமோ 2 : 12.

அழிந்து போகிற பொன் அக்கினியினால் சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற நம் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது நமக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகும். I பேதுரு 1 : 7. எவ்வளவு பெரிய சிலாக்கியம், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனசாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களை பொறுமையாய்ச் சகித்தால் அதுவே தேவனுக்கு பிரீதியாயிருக்கும். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில் கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு நாம் கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியை பின் வைத்துப் போனார். அத்தோடுமல்லாமல் இன்று தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பது போல சதாகாலமும் நாமும் கிறிஸ்துவுடன் வீற்றிருப்போம்.

நீதியினிமித்தம் நாம் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்போம், என்று வேதம் நமக்கு கூறுகிறது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால்

பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறோம். இது சிறந்த சிலாக்கியம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் துன்மார்க்கரும் அநியாயக்காரரும் அவர்கள் குடும்பமும் செழித்து வாழ்ந்து சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருப்பதை தீர்க்கதரிசியும், தாவீது ராஜாவும் விடைகாண ஆராய்ந்தார்கள் (சங் 73 எரேமி 12 அதி.) கிடைத்த பதில் தேவன் துன்மார்க்கரை சறுக்கலான இடங்களில் நிறுத்தி பாழான இடங்களில் விழப் பண்ணுகிறார். ஒரு நிமிஷத்தில் பாழாய்ப் போகிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாமோ கொஞ்ச காலம் பாடநுபவித்து பின் தேவனால் சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி நிலை நிறுத்தப்படுகிறோம். என்னே தேவனுடைய அன்பு, அவருடைய நீதி நியாயத்தை, யாராலும் அறிய முடியாது.

நாம் துன்பமும், சுகவீனமும், வறுமையும் வரும்பொழுது தான் தேவனை அடிக்கடி நினைக்கிறோம். ஆகவே, பாடுகள் நம்மை பரமனிடம் அண்டிக் கொள்ளவே பாதையமைத்துக் கொடுக்கிறது. இது தேவனுடைய ஞானம், செயல்.

**ஞானம் மலேசியா.**

## வாலிபனே

*வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.*

*நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு இளவயதும் வாலிபமும் மாயையே.*

**பிரசங்கி 11 : 9 -10**

# கர்த்தருடைய சபையை நாம் கண்டுபிடிக்க முடியுமா?

## சபை என்றால் என்ன?

சபை என்றால் அழைக்கப்பட்டவர்கள் (கொலோ 1:13, II தெச 2:14) இது உலகத்திலிருந்து "அழைக்கப்பட்ட" மக்களின் கூட்டம்". கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு கர்த்தருடைய சபை உண்டாக்கப் பட்டிருக்கிறது. (லூக் 8 : 11, யோவா 16 : 13) ஆக சபை என்பது மனமகிழ் மன்றமோ அல்லது அரசியல் அமைப்போ அல்ல.

## சபையை தெரிந்தெடுப்பதில் உள்ள தவறான கொள்கைகள்

சௌகரியமான இடத்தில் இருக்கிறதென்பதற்காக ஒருவன் "சபையை"த் தெரிந்தெடுத்துக் கொள்ளக் கூடாது. ஒருவேளை இது ஒரு வங்கிக்கோ ஒரு கடைக்கோ அல்லது வேறு இந்த வகையான ஒன்றிற்கோ சரியாக இருக்கலாம். சபையைத் தெரிந்தெடுப்பதில் பெரும்பாலானவர்கள் செய்யும் வேறொரு தவறு, நிறைய அங்கத்தினர் அங்கு இருக்கிறார்கள் என்பது. லட்சங்களிலுள்ளவர்கள் தவறாக இருக்க வாய்ப்புண்டு நோவாவின் நாட்களில் உலகலாவிய அழிவு ஏற்பட்டபோது எட்டுப் பேரே காப்பாற்றப்பட்டார்கள் ( I பேது 3 : 20) இன்னும் ஒரு சாரார் ஒரு பிரசங்கியாரை தங்களுக்குப் பிடிப்பதால், அவர் இருக்கும் சபையைத் தெரிந்தெடுப்பர். இப்படி விரும்பி ஒருவரைத் தெரிந்தெடுப்பது ஒரு மருத்துவர், ஒரு மெக்கானிக் போன்றவர்கள் காரியத்தில் நன்மை தர முடியும். ஆனால் சபை விசயத்தில் அப்படிக் கூடாது. நாம் சபையை அடையாளப்படுத்தும் காரியத்தில் நமது பெற்றோர், கணவன், மனைவி, அயலகத்தார் இப்படிப்பட்டவர்களின் வழி பெரும்பாலும் தவறான தாகவே இருக்கிறது.

## சபையைக் கண்டு பிடிப்பதில் சரியான கொள்கை

முதலாவது ஒருவன் சரியான மூலத்திற்குப் போக வேண்டும். இதன் பொருள் நாம் பஞ்சாங்கம் பார்ப்பதோ, ஜோசியம் கேட்பதோ அல்ல. இன்றைக்கு புதிய ஏற்பாடு மனிதனுக்கு இரட்சிப்பைப் பற்றிச் சொல்லும் பாடநூல் ஆக உள்ளது. உள்ளும் புறம்புமான சபைக்கான அடையாளங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒருவன் தேவனுடைய வார்த்தைக்குள்ளாக இருக்க வேண்டும். உட்புறமான அடையாளங்கள் மனிதனின் அன்பு, தான தர்மம், ஒழுக்கம், ஊழிய தாகம் போன்றவை.

அமைப்பு, ஆராதனை முறை, மீட்பின் திட்டம், கொள்கை, சபையின் வேலை போன்றவை வெளிப்புறமான அடையாளங்கள்.

**மார்க்க ரீதியாக எது ஜனங்களை பிரித்து வைக்கிறது?**

மார்க்க பாரம்பரியங்கள் பிரிவினைக்கு துணை போகிறது. புதிய ஏற்பாட்டில் காணப்படாத கொள்கைகளை நாம் நமது முன்னோர் மற்றும் பெற்றோர்களிடமிருந்து சுதந்தரித்து கொள்கிறோம். அறியாமை ஒரு பிரதான காரணம். சிலர் தங்கள் ஊழியர் எது சொன்னாலும் அப்படியே தலையசைக்கின்றனர். கேள்வி என்பதே கிடையாது. விசுவாசத்திற்கும் ஒருவனுடைய கருத்துக்கும் வேறுபாடு உண்டு. ஒரே ஒரு விசுவாசமே உண்டு (எபே 4).

**சபை முக்கியமானது**

மனுக்குலம், ஒரே சரீரத்துக்குள்ளாக தேவனிடம் ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறான். (எபே 2 : 16) சபையின் மூலமாக நாம் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும். (எபே. 3 : 21) சபையானது, சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாக உள்ளது. (I தீமோ. 3 : 15) இயேசு சபைக்காக மரித்தார் (எபே 5 : 23 – 25).

அன்பான வாசகரே! தேவனுடைய வசனத்தை, நீங்கள் எல்லா ஆர்வத்தோடும் ஆராய்ந்து பார்க்க உங்களை ஊக்கப்படுத்துகின்றோம். ஏனென்றால் இவை உங்கள் இரட்சிப்புக்கும், இறுதி நாளிலான நியாயத் தீர்ப்புக்கும் அவசியம் (யோவா 12 : 48).

**DABNEY PHILLIPS** **டாப்னி பிலிப்ஸ்**

## இரட்சிப்பின் படிகள்

| | | |
|---|---|---|
| கேள்விப்படுதல் | அப் 8 : 31 | ரோமர் 10 : 17 |
| விசுவாசம் | மாற்கு 16 : 16 | யோவா 8 : 24 |
| மனந்திரும்புதல் | அப் 17 : 30 | II பேதுரு 3 : 9 |
| அறிக்கையிடுதல் | மத் 10 : 32, 33 | ரோமர் 10 : 9-10 |
| ஞானஸ்நானம் | அப் 22 : 16 | கொலோ 2 : 12 |

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20, நவம்பர்-1997
-THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி:-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ் " வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
**காங்கயம் - 638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor **E.Z.S. Rajanayagam**

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor Phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
Post Box No. 27, KANGAYAM - 638 701.